மே – 23

**"நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்." - யோவா 13 : 14**

கிறிஸ்துவின் சீஷர்கள் ஒருவரை ஒருவர் துப்புரவாயும், பரிசுத்தமாயும், சுத்தமாயும் வைத்திருக்கவும், இப்பொழுதிருக்கிற பொல்லாத உலகத்திலுள்ள, சோதனைகளின் மூன்று உற்பத்தி ஸ்தாபனங்களான உலகம், மாம்சம், பிசாசு ஆகிய இவைகளிலிருந்து கிளம்புகிற துன்பங்களையும், சோதனைகளையும், சூழ்ச்சிகளையும் வெல்லுவதில் ஒருவருக்கொருவர் உதவி செய்யவும், ஒருவர் மற்றொருவருடைய நலன் மீது பரஸ்பர காவல் - கவனிப்பு வைத்திருக்க வேண்டும் என்று இந்த வாக்கியம் தெரிவிக்கிறது. பலவிதமான ஆவியின் குணசீலங்களான சாந்தம், பொறுமை, தயவு, சகோதர சிநேகம், அன்பு இவைகளை நாம் பயிலும் பொழுது மாத்திரமே, குணத்தின் இந்த அலங்காரங்களையும் ஜீவியத்தின் தூய்மையையும் மற்றவர்கள் அணிந்து கொள்ளவும் உலகம், மாம்சம், இவைகளின் அசுசியிலிருந்து அவர்கள் நீங்கவும் அவர்களுக்கு உதவியாயிருக்க நாம் எதிர்பார்க்கக்கூடும். **- Z '97, 243 (R 2200).**

ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவ நமக்கு புத்தி சொல்லுகிறதில் உண்மையாகவே கர்த்தர் சொல்லர்த்தமுள்ள கால்களை குறிக்கவில்லை. ஏனென்றால், இப்பொழுது இருக்கிற நிலைமைகளில் தன்னுடைய சீஷர்களின் கால்களை கழுவினதில் அவர் காண்பித்த ஆவிக்கு இது எதிரானதாக இருக்கும். இயேசு அவர்களுடைய கால்களை கழுவினது அவர்களுக்கு சுகமாக இருந்தாலும், அவர் இவ்விதமாக அவர்களுக்கு ஊழியம் செய்ததாலும், ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவ அவர் நமக்கு புத்தி சொல்லுகிறது என்னவென்றால், ஒருவர் மற்றவர்களுக்கு மிகவும் தாழ்மையான வழிகளிலும் அன்பின் ஊழியம் செய்ய வேண்டும் என்பதே. **- P '35, 62.**

**ஒத்த வாக்கியங்கள்:-**

மத் 4:19; 10:16-24; 20:25-28; 23:8-11; யோவா 4:36-38; லூக் 10:1,2; அப் 6:3,4; 13:1-3; 20:24; ரோம 10:14,15; 1கொரி 9:16-20; 2கொரி 5:18-20; எபே 4:11,23; எபி 5:4; ஏசா 32:20; 52:11; எரே 20:9; மல் 2:6,7; யோவா 13:13-17; 1கொரி 3:7-10.

**கோபுர வாசிப்பு: Z '12, 273 (R 5090)**

**வினாக்கள்:** இந்த வாரத்தில் சகோதரருக்கு நான் ஊழியம் செய்தேனா ? எப்படி? ஏன்? எந்தச் சந்தர்ப்பங்களில்? பலன் என்ன?